# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 71/2022 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திரு.பிரகாஷ் |
| Father's Name | | திரு.கணேசன் |
| Village | | பட்டுக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 50/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of February 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**(சாட்சியை நீதிமன்ற திரு புண்ணியமூர்த்தி சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பட்டுக்கோட்டை மணிக்கூண்டு அருகில் உள்ள பள்ளிவாசல் எதிரில் தள்ளுவண்டியில் பழ வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் அதிரியை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. கூட்டமாக இருந்தது. யாரோ என்னிடம் இருந்த பணத்தை எடுத்து சென்றுவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில்லுள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், கடந்த 05.02.2019 மலை 07.30 மணியளவில் பள்ளிவாசல் அருகே நான் தள்ளுவண்டியில் பழ வியாபாரம் செய்து

கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரி நான் கொலை வழக்கில் இருந்து வெளியே வந்தவன் எனக்கு செலவுக்கு பணம் கொடு இல்லையெனில் கத்தியால் சங்கருத்து காலி செய்து விடுவேன். என மிரட்டி எனது சட்டை பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து கொடுடா என்று சொல்லி எதிரி தனது பேன்ட் பாக்கெட்டில் இருந்த ஊதா வெள்ளை பிலாஸ்டிக் கைபிடியுடன் கூடிய கத்தியை கையில் எடுத்து என் கழுத்தின் அருகே நீட்டியதாகவும் பணத்தை கொடுக்கவில்லை எனில் இங்கயே கழுத்து அறுத்து காலி செய்துவிடுவேன் மிரட்டியதாகவும் என்னிடம் இருந்த பழம் விற்ற பணம் 1400 எடுத்துகொண்டு இதை வெளியே சொன்னால் உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாக அப்போது அருன் என்பவரை கண்டதும் அங்கிருந்து எதிரி ஓடியதாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரி தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை